Reg. No. M.

தனிப்பிரதி 1 அணா

ஆசிரியர் :
யாழ்ப்பாணம்
தென்கோவை.
ச. கந்தையபிள்ளை
தமிழ்ப் பண்டிதர்,
சிலோன்.

REPUBLIQUE FRANÇAISE

Liberté - Egalité - Fraternité

# VITTAGAM

LE REDACTEUR
TENKOVAI
S. CANDIAH PILLAI
TAMIL PANDIT
JAFFNA
CEYLON.

JOURNAL HEBDOMADAIRE PARAISSANT LE JEUDI

# வித்தகம்

வியாழக்கிழமை தோறும் வெளிவருவது

நத்தம்போற் கேடு முளதாகுஞ் சாக்காடும்
வித்தகர்க் கல்லா லரிது. — குறள்.

VOL, I. { புதுவை, ஸ்ரீமுக௵ மார்கழி ௴ ௧௪ ௳ (28—12—33) } No. 5

## சிவவாக்கியர்.

ஐயன்வந்து மெய்யகம் புகுந்தவாற தெங்ஙனே
செய்யதெங் கிளங்குரும்பை நீர்புகுந்த வண்ணமே
ஐயன்வந்து மெய்யகம் புகுந்துகோயில் கொண்டபின்
வையகத்தில் மாந்தரோடு வாய்திறப்ப தில்லையே.

தில்லைநாய கன்னவன் திருவரங்க னுமவன்
எல்லையான புவனமு மேகமூர்த்தி யானவன்
பல்லுநாவு முள்ளபேர் பகுந்துகூறி மகிழுவார்
வல்லபங்கள் பேசுவார் வாய்புழுத்து மாய்வரே.

ஓடியோடி யோடியோடி யுட்கலந்த சோதியை
நாடிநாடி நாடிநாடி நாட்களும் கழிந்துபோய்
வாடிவாடி வாடிவாடி மாண்டுபோன மாந்தர்கள்
கோடிகோடி கோடிகோடி யெண்ணிறந்த கோடியே.

உ

திருவருள் துணை.

ம்
நந்திபதி
கோல்

காலமுண்டாகவே காதல்
செய்துய்மின் கருதரிய
ஞாலமுண்டானொடு நான்முகன்
வானவர் நண்ணரிய
ஆலமுண்டானெங்கள் பாண்டிப்
பிரான்தன் னடியவர்க்கு
மூலபண்டாரம் வழங்கு
கின்றான்வந்து முந்துமினே.
(திருவாசகம்.)

# வித்தகம்

புதுவை,
ஸ்ரீமுக மார்கழி மீ 14உ

## குருநெறி

குருநெறி என்றால் என்ன? அது தான் குரு காட்டும் நெறி; குருவால் காட்டப்படும் நெறி என்று கூறப்படும். நெறி, வழி, மார்க்கம், கதி என்பன ஒன்றே. லௌகிக சித்திகளைப் பெறுதற்குத்தான் பாரமார்த்திகம் எனக் கருதுவனவற்றிற்குத் தான் குரு என்றோ ஆசான் என்றோ புரோஹிதன் என்றோ அறிவு ஒழுக்கம் கடவுட் பத்தி என்பனவற்றால் தம்மினும் மேலானவர் என்று கருதப்பட்ட ஒருவரை நாடி நிற்றல் சமயிகள் யாவர்க்கும் ஒத்த முடிபே ஆகின்றது. உலகம் கற்பனை சொரூபம். கற்பனையையே உண்மை என நம்பி ஒழுகுவது உலகியல். ஆயினும் அக்கற்பனையாகிய போலிக்கு ஊடாகவே உண்மை விளங்கிக்கொண்டு இருக்கின்றது. நெறியல்லா நெறிகளைக் கொண்டு தான் உண்மை நெறி ஒன்று உண்டு என அறிய வேண்டும். அவையே உண்மையின் ஆதித்தோற்றமாய் அதனை அறிதற்கு வாயிலாகின்றன. வேறு வாயில் இல்லை. ஆதலால் உலகியலாகிய கற்பனைகளுக்கு நல்வரவுகூறி அவற்றைக் கொண்டே உண்மை நெறியைக் கடைப்பிடித்து உய்தி அடைவது முறையாகும். அன்றி அக்கற்பனைகளைப் புறக்கணிக்கத் துணிவதும் அவற்றையே உண்மை என நம்பி அமைவதும் உய்யும் திறன் ஆகா என்க; நெறியல்லா நெறிகளால் சித்தி முத்திகளை வாய்மையாக அடைய முடியாமையால் அவற்றை வாய்மையாக அடைதற்கு ஏற்ற சத்திய நெறி சத்திய நெறியாகிய குருநெறி ஒன்று உண்டு என்பது வெள்ளிடை ஆகின்றது.

“நெறியல்லா நெறிதன்னை நெறியாக நினை
[வேனைச்
சிறு நெறிகள் சேராமே திருவருளே
[சேரும் வண்ணம்
குறி யொன்று மில்லாத கூத்தன்றன்
கூத்தையெனக், கறியும் வண்ணமருளிய
[வாறார் பெறுவாரச் சோவே”

(திருவாசகம்—அச்சோப்பதிகம். செ. 2.)

என மணிவாசகப் பெருமான் இவ்வுண்மையை அநுபவமாய் அறிந்து அருளியதும் அறிக. எல்லாச் சாதியாளராலும் — எல்லாச் சீவராலும் அடையப்பட வேண்டியதும் யாவர்க்கும் உரிமையான பொது நெறியாகிய சத்திய நெறியும் இக்குருநெறியே ஆகும். இக் குரு நெறியே இச் சிறிய கட்டுரையில் ஒருவாறு ஆராய்வான் எடுத்துக்கொண்ட பொருளாகும்.

குரு என்பவர் யார்? எனின், அவர் தாம் குற்சிதங்களை நீக்குபவர்; குற்சிதமாகிய குற்றங்களை நீக்குபவர்— அழுக்கை அகற்றுபவர்; அழுக்காகிய மலத்தை மலமாகிய பாசத்தை அகற்றுபவர் என்று கூறப்படும். எனவே துன்பத்தைத் தரும் கட்டுக்களை கட்டுக்களாகிய பந்தங்களை அறுத்து இன்பம் அடையச் செய்பவரே— வீடடையச் செய்பவரே குரு என்பது நன்கு பெறப்படும். சீவர்களாகிய நமது உடலுள் இன்பவடிவாய் இருக்கும் இறைவனே — சத்தாகிய சத்துவமாகிய சிவபரம்பொருளே நமது கர்மத்துக்கு ஏற்பக் குருவடிவாய் முன்னிலையில் தோன்றி நன்னெறி காட்டுகின்றனன். சீடன் எப்பக்குவம் பெற்றனனோ அப்பக்குவமே குருவும் பெற்றவன் ஆவன். அஃதாவது சீடனது கர்மத்துக்கு — பக்குவத்துக்கு ஏற்ற குருவே முன்னிலைப் படுகின்றான் என்பது. இதனாற்றான் குருவுக்குத் தக்க சீடன், சீடனுக்குத் தக்க குரு என்னும் வழக்கும் ஏற்பட்டது. “குருவும் மாணாக்கன்றானும் குறைவறச் சமத்தை மேவி இருவரும் நிலைமை ஒப்போர்” என ஞானவாசிட்டம் (பகீரதன் கதை செ. 28) கூறியதும் அறிக.

குரு, ஆசான். புரோஹிதன் என்பன ஒரு பொருட் சொற்கள். ஆசான் என்பது சந்மார்க்கம்போதிப்பவன்—நல்வழிகாட்டுபவன்—மெய்ந்நெறிகாட்டுபவன் — எனப்பொருள்படும். புரோஹிதன் என்றால் என்ன? புரம் என்றால் இடம் பட்டினம் சரீரம் என்பர். “பண்டன்று பட்டினங் காப்பே” என்னும் திருவாய் மொழியில் சரீரம் பட்டினம் எனப்பட்டது. சீவர்களாகிய நமக்கு இடமாய் உள்ளது—பதியாய் உள்ளது இச்சரீரமே; புரத்துக்கு புரமாகிய சரீரத்துக்கு மும்மலகாரிய முப்புரம் என்னும் உடலுக்கு — உடலுயிருக்கு இன்பம் செய்பவன்—இதம் செய்பவன் புரோஹிதன் அல்லவா? “உற்ற ஆக்கையின் உறுபொருள்” (திருவாசகம்) என்றவாறு ஆக்கையாகிய புரத்துள் தோன்றாத்துணையாய் வேத வித்தாய் இன்பவடிவாய் இருப்பவனும், நற்றவப் பயனால் வடிவுகொண்டு முன்னிலையில்

தோன்றிநமக்குஇதோபதேசம் செய்பவனும் புரோஹிதன் அல்லவா? இன்னும்எவ்வாறுஆய்ந்துகூறினும் பொருளால் ஒன்றே என அறிக

வேதம் ஆகமம் புராணம் முதலிய அரிய பெரிய நூல்கள் எல்லாம் பிறவிவலைப்பட்டு உழலும் சீவர்கள் பிணி மூப்புச் சாக்காடுகள் நீங்கி நித்தியத்துவம் அடைதற்கு ஏற்ற சத்திய நெறியாகிய குருநெறி ஒன்று உண்டு எனவும், அந்நெறி காட்டும் குரவனுவான் கயிலை முதற்குரவனும் சைவ சமய அரசனும் ஞான சத்தி வடிவினனுமாகிய நந்தி யெம்பெருமானே எனவும் வற்புறுத்துக் கூறுகின்றன.

## திருமந்திரம்.

"சைவ சமயத் தனிநா யகனந்தி
உய்ய வகுத்த குருநெறி யொன்றுண்டு
தெய்வ சிவநெறி சன்மார்க்கஞ் சேர்ந்துய்ய
வையத்து ளார்க்கு வகுத்துவைத் தானே.'

(5-ம் தந். 2-வது உட்சமயம் செ. 11.)

அதர்மம் மேற்பட்டுத் தர்மம் மறைந்த காலந்தோறும் கடவுளே அவதாரம் செய்து தீயோரை அழித்து நல்லோரைக் காத்துச் சத்திய நெறியாகிய தர்மத்தை நிலைநாட்டுவார் என்பது பகவத்கீதையாலும் தெரிகின்றது.

## பகவத்கீதை.

"யதா யதாஹி தர்மஸ்ய க்லாநிர்பவதி
[பாரத !
அப்யுத்தாந மதர்மஸ்ய ததாத்மானம் ஸ்ருஜாம்யஹம்."

"பரித்ராணய ஸாதுநாம் விநாசாயச
[துஷ்க்ருதாம்
தர்ம ஸம்ஸ்தாபநார்த்தாய ஸம்பவாமி
[யுகே யுகே."

(மேற்படி அத்தியாயம் 4.-சுலோகம் 7,8.)

துன்பம் நீங்கி இன்பம் அடைவதே சீவர்கள் நோக்கம். பிணி மூப்புச் சாக்காடுகளுக்கே சீவர்கள் அஞ்சுவது. அச்சமே ஐயம்—திலேசத்துமம். ஐயம் என்றால் என்னை? அதுதான் அசுத்த ஐம்பூத காரியம்; அசுத்த பௌதிக நிறையின் காரியம். சரீரத்துள்ள அசுத்த நிறையே பிணி மூப்புச் சாக்காடுகளுக்குக் காரணம்; துன்பங்கள் யாவற்றுக்கும் காரணம். இதுவே காலன்—யமன். ஆதலால் எவ்வகையிலும் பிணிமூப்புச் சாக்காடுகள் நீங்கிச் சுகமடைவதே—ஐயமாகிய அச்சம் நீங்கி இன்பமடைவதே சிவ முயற்சிக்கு அடிப்படை என்று கூறப்படும். ஐயம் ஒழியவே துன்பங்கள் யாவும் ஒழியும்— பிறவிப்பிணி ஒழியும்.

## திருவாசகம்.

"...அச்சத்தாலே ஆழ்ந்திடுகின்றேன்..."

(திருச்சதகம் செ. 81.)

கறங்கோலை போல்வதோர் காயப்பிறப்போ
[டிறப்பென்னும்
அறம்பாவ மென்றிரண் டச்சந் தவிர்த்
[தென்னை யாண்டுகொண்டான்..."

(மேற்படி திருத்தெள்ளேணம் செ. 8)

எனவும் அருளப் பட்டனவற்றை நோக்குக. இப்பிறவிப் பிணியாகிய ஐயத்தை—அச்சத்தை ஒழிக்கும் மருந்துதான் என்ன? கடவுள் திருவடியே மருந்து, மருந்தாகிய அமுதம் என்று கூறப்படும்.

"......எங்கள் பிணி தவிர்த்து
வழுவாமருத்துவமான............ஐயாறன்
[அடித்தலமே"

என்பது அப்பர் தேவாரம்.

(திருவையாறு திருவிருத்தம் செ. 5.)

## குறள்.

"தனக்குவமை யில்லாதான் றாள் சேர்ந்
[தார்க்கல்லால்
மனக்கவலை மாற்றல் அரிது."

எனத் தேவர் கூறியதும் அறிக.

(ஷை கடவுள் வாழ்த்து செ. 7.)

ஒரு வகையாலும் தனக்கு இணையில்லாத இறைவன் திருவடிகளை அடையப் பெற்றவர்க்கே யன்றி ஏனையோர்க்கு மனத்தின்கண் உளவாகும் துன்பங்களை மாற்றுதல் முடியாத காரியம் என்பது இதன் பொருளாகும்.

திருவடி என்பது சீவர்களாகிய நமது சரீரத்துள் மறையாய் - மறை பொருளாய் இருக்கும் அமல ஈகாரம். உடல் உயிரை அமலமாக்கிமனத் துன்பம் சரீரத்துன்பம் என்பன வற்றை ஒழித்து நித்தியத்துவம் அளிப்பது இதுவே. இதன் இயல்பு அமயம் நேரும்போது விளக்கிக்கூறப்டும். "மாற்றல்" என்பது, துன்பமே, துன்பம்தரும் மாயையே—பாசமே இன்பமாய் ஞானமாய் மாற்றமடைந்து பயன்படும் என்னும் வேத உண்மையை உணர்த்தி நின்றது.

## திருமந்திரம்.

ஆகு முபாயமே யன்றி யழுக்கற்று
மோக மறச்சுத்த ஞதற்கு மூலமே
யாகு மறுவை யழுக்கேற்றி யேற்றல்போ
லாகுவ தெல்லா மருட்பாச மாகுமே.

(மேற்படி 8-ம் தந்-பதி பசு பாச வேறின்மை செ. 18)

இத்திருவடியைக் காட்டும்வாய்மையான குரவன் யார்? அவன்தான் பரம கருணாநிதியாய் நம்மிலும் நமக்கு இனியனுய்ச் சீவர்களாகிய நமது சடபேதம் கர்ம பேதங்களையும் அவற்றுலான பக்குவ பேதங்களையும் பூரணமாய் அறிந்து நல்லனவும் தீயனவுமாகிய அக்கர்மங்களின் ஏற்றத்தாழ்சிகளை ஏற்ற ஏற்ற உபாயங்களால் நீக்கி அவற்றைச் சமப்படுத்தி மலபரிபாகம் வருவித்துப் பிணிமூப்புச்சாக்காடும் பிறவியும் ஒழித்து நம்மைப் பூரணப்படுத்த வல்ல பவரோகவைத்தியனும் எல்லாம் வல்ல சித்தனுமாகிய கயிலைமுதற் குரவனே ஆவன். உடலுயிர்ப் பிணிநீக்கி நித்தியத்துவம் அளித்தல் பற்றியே வைதிகனுகிய-வைதிக சைவ வடிவினனுகிய எம்பெருமான் பவரோக வைத்தியன் எனப்பட்டனன்— வைத்தியநாதன் எனப்பட்டனன் "வேதகிரிப் பவரோக வயித்தியவேணி முடிக்கனியே" என ஆன்றோரும் கூறினர். வை

கனே வைத்தியன். வைதிகமும் வைத்தியமும் ஒன்றே. அமயம் நேர்ந்துழி இவ் வுண்மை விளக்கிக் கூறப்படும்.

இக் குருநாதனை அடைவது எப்படி? தடையிலா ஞான முடையவனும் அன்பரை வலிய ஆட்கொள்ளும் வள்ளலும் ஆகிய குருநாதன் பக்குவ முடையோரை அறியாமல் இருக்கமுடியுமா? பூமலர்ந்தால் வண்டினங்களை ஒருவர் அழைக்க வேண்டுமா? அவை தாமே வரும் அல்லவா? ஆதலால் பக்குவம் உண்டேல் குருவும் உண்டு. இயற்கை முறையாகிய திருவருள் மாண்பு இதுவே என்க. பக்குவ சீவர் இலக்கணமும் அவருக்கு உபதேசிக்கப்படும் சாதகயோக விதிகளாகியவேதாகம கட்டங்களும் அவரவர் சடபேதம் என்பனவற்றிற்கு ஏற்ப வெவ்வேறாய் அளவுபடாதனவாகும் என்பதன் உண்மையும் அமயம் நேரும்போது விளக்கிக் கூறப்படும்.

பவரோக வைத்தியனாகிய குருநாதன் பக்குவசீவருக்கு என்ன உபதேசிப்பான்?

சுத்தசாதம் 70, 71, 76, 78, 80, 82, 90-ம் செய்யுட்களை நோக்குக. "சிவாயநம" என்றும் "நாராயணாயநம" என்றும் சில எழுத்துக்களையோ சொற்களையோ வாளா உபதேசிப்பதில்லை. இவற்றின் பொருளையே—அப்பொருளை அடைதற்கேற்ற சாதக யோகங்களையே உபதேசிப்பான். குரு அருளால் உபதேசிக்கப்பட்ட சாதகயோகங்களால் இப்பொருளைத் தாம் அடைந்த உண்மையையே "சிவாயநம" "நமச்சிவாய" "நாராயணாயநம" என்னும் கௌணபதங்களால் தத்துவப் பெரியார் தமது பாடல்களில் மறை பொருளாகக் கூறியருளினர். அமயம் நேரும்போதுஇவ் உண்மை விளக்கிக் கூறப்படும்.

### குரு நெறியின் பயன்.

இவ் உபதேசத்தால் ஆகும் பயன் யாது?

### திருவாசகம்.

மலமாக்குரம்பை இது மாய்க்கலாம்;
(மேற்படி திருச்சதகம் செ. 54.)

ஊனார் புழுக்கூடு இது காத்து இங்கு இருக்க வேண்டியதில்லை;
(ஷை செ. 55.)

முடையார் புழுக்கூடு இது காத்து இங்கு இருக்க வேண்டியதில்லை;
(மேற்படி செ. 56)

இவ் அசுத்த உடலைக்களையலாம்;
(ஷை செ. 64.)

இப்புழுக்கூடு நீக்கிப் பொய் எலாம் வீட்டிலாம்;
(ஷை செ. 100.)

இவ்வுடல் தன்னைச் செற்றிடலாம்;
(ஷை செத்திலாப்பத்து செ. 2.)

காயமாயத்தைக் கழிக்கலாம்;
(ஷை செ. 5.)

### அப்பர் தேவாரம்

சித்தையைச்சிதம்புதன்னைச்செடி
கொள்நோய்வடிவுஒன்றில்லா
ஊத்தையைக் கழிக்கலாம்;
(மேற்படி தனித்திருநேரிசைசெ. 7.)

அசுத்தமான இவ் உடம்பைத் தொலைக்கலாம்;
(ஷை பசு பதி திருவிருத்தம் செ. 2.)

ஊனைக் கழித்து உய்திஅடையலாம்;
(மேற்படி திருவையாறு திருவிருத்தம் செ. 4.)

அசுத்த தநுவாகிய அக்காணி (அஃகாணி—ஆய்தம்) கழித்திடலாம்;
( திருவாய் மொழி. )

### திருவாசகம்.

அசுத்தமானஇக்குப்பாயம்புக்கு இருக்கவேண்டியதில்லை;
(ஆசைப் பத்து செ. 2.)

அழுக்கொடு திரியும் சிறுகுடில் இது சிதையும்—சிதைவுபடும் — கெட்டுத் திரியும்;
(ஷை செ. 3.)

செடியார் ஆக்கைத் திறம்அற வீசலாம்;
(ஷை செ. 9.)

வினைகளின் நிறை பேதத்தால் ஒப்பு வாராது—சமம்பெறாது ஊசலாட்டும் இருவினை சொரூபமாகிய உடலுயிர் கெட்டுத்திரியும்—சமப்படும்—நிறைபெறும்— ஒளிமயமாகும்.
(மேற்படி அற்புதப்பத்து செ. 8.)

படிற்றாக்கையை விட்டு எம்பெரு [மானைப்பூணலாம்
(மேற்படி திருச்சதகம செ. 44.)

அசுத்த பௌதிகங்கள் நீறாகும்—சுத்த பௌதிகமாகும் — அசுத்தம் நீங்கிப் பொற்சுண்ணமாகும், அம்மையப்பருக்கு உவப்பான பொன் மயமாகும், பொன் தேகமாகிய—இடப தேகம் — ரக்ஷகதேகம் உளதாகும்.

### திருவாசகம்.

பூவியல் வார்சடை யெம்பிராற்குப்
பொற்றிருச் சுண்ண மிடிக்க வேண்டும்
மாவின் வடுவகி ரன்னகண்ணீர்
வம்மின்கள் வந்துடன் பாடுமின்கள்
கூவுமின் றொண்டர் புறநிலாமே
குனிமின் றொழுமினெங் கோனெங் [கூத்தன்
தேவியுந் தானும்வந் தெம்மையாளச்
செம்பொன்செய் சுண்ண மிடித்து [நாமே.
(ஷை திருப்பொற்சுண்ணம்—செ. 2.)

### திருமந்திரம்.

எளிய வாதுசெய் வாரெங்க ளீசனை
யொளியை யுன்னி யுருகு மனத்தராய்த்
தெளிய வோதிச் சிவாய நமவெனுங்
குளிகை யிட்டுப்பொன் னாக்குவன் கூட் [டையே
(ஷை 9-ம் தந் 6-வது சூக்கும பஞ்சாக்கரம் செ. 1.)

அழிதரும் ஆக்கை ஆகிய பிராரத்த உடம்பு—வினைப்போக தேகம் ஒழியும்; ஆசைப்பட்ட அளிதரும் ஆக்கையாகிய அள் ஊறு ஆக்கை அமையும்; ஆலம் அமுதமாகும்; அருளொடு பார அமுதமாகும்:

(திருவாசகம் திருவண்டப்பகுதி)

எம்பெருமான் குடிபுகுதலால் வினைபடும் உடல் விழுமியவிமானம்ஆகும்;

## கருவூரார்.

புனல்படவுருகிமண்டழல்வெதும்பிப்
பூம்புனல்பொதிந்துவிரளிக்கும்
வினைபடுநிறைபோனிறைந்தவேதகத்தென்
மனநெக மகிழ்ந்தபே ரொளியே
முனைபடுமதின்மூன்றெரித்தநாயகனே
முகத்தலை யகத் தமர்ந்தடியேன்
வினைபடுமுடனீபுகுந்துநின் றமையால்
விழுமியவிமானமாயினதே.

(மேற்படி திருவிசைப்பா திரு முகத்தலை செ. 6.)

சவமணம் கமழும்புலால்துருத்தியாகிய அசுத்த உடலம் பூமணம் போலும் சிவமணம் கமழும் பூந்துருத்தியாகும்;

## அப்பர் தேவாரம்.

கோர்ந்தொருத்தி யொருபாகத் தடங்கக்
[கண்டு குவலதளரவாயிரமாமுகத்தினோடு
பாய்ந் தொருத்திபடர் சடைமேற் பயிலக்
கண்டு படவரவும்பனிமதியும் வைத்த
[செல்வர்
தாந்திருத்தித்தம்மனத்தை யொருக்காத்
தொண்டர் தனித்தொருதண்டூன்றி
[மெய்த் தளரா முன்னம்
பூந்துருத்தி பூந்துருத்தி யென்பீராகிற்
பொல்லாப்புலாற்றுருத்திபோக்கலாமே.

(மேற்படி பலவகைத் திருத்தாண்டகம் செ. 1.)

வழியடியராய் இந்திரராய்ச்சகல போகங்களையும் அடையலாம். அமரர் உலகம்—பொன்னுலகம் ஆளலாம்.

## திருவாசகம்.

"கானூர் புலித்தோ லுடைதலையூண் காடு
ஆனா லவனுக்கிங் காட்படுவாராரேடி [பதி
ஆனாலுங் கேளா யயனுந் திருமாலும்
வானாடர் கோவும் வழியடியார் சாழலோ"

(மேற்படி திருச்சாழல் செ. 12.)

## அப்பர் தேவாரம்.

நெடியானு நான்முகனு நேடிக்காணா
நீண்டானே நேரொருவ ரில்லாதானே
கொடியேறு கோலமா மணிகண்டனே
கொல்வேங்கை யதளனேகோவணனே
பொடியேறு மேனியனே பையம்வேண்
டிப்புவலோகந் திரியுமே புரிநூலனே
அடியாரை யமருலக மாள்விக்குமே
யவனாகி லதிகைவீரட்டனுமே.

(திரு அதிகை வீரட்டானம் – அடையாளத் திருத்தாண்டகம் 11.)

களித்துக் கலந்ததோர் காதற்கசி
வொடு காவிரிவாய்க்
குளித்துத்தொழுது முன்னின்ற விப்பத்
தரைக்கோதில் செந்தேன்
தெளித்துச்சுவையமு தூட்டிய
மரர்கள் சூழிருப்ப
அளித்துப் பெருஞ் செல்வமாக்
குமையாறனடித்தலமே.

(மேற்படி திருவையாறு திருவிருத்தம் செ. 7.)

## சுந்தரர் தேவாரம்.

மண்ணுலகிற் பிறந்துநும்மை வாழ்த்தும்
[வழியடியார்
பொன்னுலகம் பெறுதலுன்றனைனின்
[முகண்டொழிந்தேன்
விண்ணுல கத்தவர்கள் விரும்ப வெள்ள
[யானையின்மே
லென்னுடல் காட்டுவித்தா னொடித்தான்
[மலை யுத்தமனே.

(ஷை திருநொடித் தான்மலை செ. 5.)

வாய்மையான சித்திகள்-அருட் சித்திகள் வாய்க்கும்;

## சூத சங்கிதை

அப்பிரசாத சின்னமானந்தமவிர்சுர ரேத்
[திரவங்கப்
பப்பியல் விகாரமந்தரத் தெழுதல்பரகாயப்
[பிரவேசஞ் செய்த
றப்பின்மெய் காட்டன் மறைத்தல் கல்லா
[நூறன்னையுந் தடையறப்பேசல்
செப்புறு நிக்கிரக மனுக்கிரகஞ் சிலையாதி
பேத மூற்பலவே

(ஷை எக்கிய வைபவ காண்டம் சாமசா கோபநிடததாற்பரிய மூரைத்த அத்தியாயம் செ. 30.)

உண்மை துறவு கைகூடும்;

## திருமந்திரம்

மெய்த்தா ளகம்படி மேவிய நந்தியைக்
கைத்தாள்கொண்டாருந் திறந்தறி வாரி
[ல்லை
பொய்த்தா ளிடும்பையைப் பொய்யற நீ
[விட்டங்
கத்தா டிறக்கி லரும்பேற தாமே.

வம்பு பழுத்த மலர்ப்பழ மொன்றுண்டு
தம்பாற் பறவை புகுந்துணத் தானொட்டா
தம்புகொண் டெய்திட் டகலத்து ரத்திடிற்
செம்பொற் சிவகதி சென்றெய்த லாமே.

(ஷை 8-ம் தந்திரம் வாய்மை செ. 11, 13.)

பிணிமூப்புச் சாக்காடும் பிறவியும் ஒழியும்;

## திருவாசகம்.

கரணங்க ளெல்லாங் கடந்துநின்ற கறை
[மிடற்றன்
சரணங்க ளேசென்று சார்தலுமே
[தானெனக்கு
மரணம் பிறப்பென் றிவையிரண்டின்
[மயக்கறுத்த
கருணைக் கடலுக்கே சென்றூதாய் கோத்
[தும்பீ

(மேற்படி திருக்கோத்தும்பி செ. 9.)

கொம்பி லரும்பாய்க் குவிமலராய்க்காயாகி
வம்பு பழுத்துடலமாண்டிங்ஙன்போகாமே
நம்புமென் சிந்தை நணுகும்வண்ணம்
[நானனுகும்
அம்பொன்குலாத்தில்லை யாண்டானைக்
[கொண்டன்றே.

(மேற்படி குலாப்பத்து செ.6.)

பிறவிதனை யறமாற்றிப் பிணிமூப்பென்
[றிவையிரண்டும்
உறவினொடு மொழியழிச்சென் றுலகுடைய
[ வொருமுதலைச்
செறிபொழில்சூழ் தில்லைநகர்த் திருச்சிற்
[றம் பலமன்னி
மறையவரும் வானவரும் வணங்கிடநான்
[கண்டேனே.

(மேற்படி கண்டபத்து செ. 6.)

## அப்பர் தேவாரம்

பிறப்புமூப்புப் பெரும்பசிவான்பிணி
இறப்பு நீங்கியிங்கின்பம்வந் தெய்திடும்
சிறப்பர் சேறையுட் செந் நெறியான்கழல்
மறப்பதின்றி மனத்தினுள் வைக்கவே.

(மேற்படி திருச்சேறை திருக்குறுந்
தொகை செ. 3.)

## திருமந்திரம்

அஞ்சனம் போன்றுட லையறு மந்தியில்
வஞ்சக வாத மறுமத் தியானத்திற்
செஞ்சிறு காலையிற் செய்திடிற் பித்தறு
நஞ்சறச் சொன்னோ நரைதிரை நாசமே.

மூன்று மடக்குடைப் பாம்பிரண்டெட்டுளே
வேன்ற வியந்திரம் பன்னிரண் டங்குல
நான்றவிழ் முட்டை யிரண்டையுங்
[கட்டியிட்
டேன்றி யிருக்க வுடலழி யாதே.

(மேற்படி 3–ம் தந். சரீர சித்தி யுபாயம்
[செ. 4. 5.)

இடக்கை வலக்கை யிரண்டையு மாற்றித்
துதிக்கையா லுண்பார்க்குச் சோரவும்
[வேண்டா
முறக்கத்தை நீக்கி யுணரவல் லார்கட்
கிறக்கவு வேண்டா மிருக்கலு மாமே.

நாவி னுனியி னடுவே சிவிறிடிற்
சீவனு மங்கே சிவனு முறைவிட
மூவரு முப்பத்து மூவருந் தோன்றுவர்
சாவது மில்லை சதகோடி யூனே.

மேலை யணுவில் விரைந்திரு காலிடிற்
காலனு மில்லை கதவுந் திறந்திடு
ஞால மறிய நரைதிரை மாறிடும்
பாலனு மாவான் பராநந்தி யாணையே.

(மேற்படி 3–ம் தந். கேசரியோகம் செ.
3, 5, 7.)

## ஔவை குறள்.

### கண்ணாடி.

நாபி யகத்தே நலனுற நோக்கிடில்
சாவது மில்லை யுடம்பு 3.
நெற்றிக்குநேரே நிறைந்த வொளிகாணில்
முற்று மழியா துடம்பு. 8.

### சூனியகாலமறிதல்.

அஞ்சு மடக்கி யறிவோ டிருந்தபின்
துஞ்சுவ தில்லை யுடம்பு 6.
தீயாக வுள்ளே தெளிவுற நோக்கினல்
மாயாது பின்னை யுடம்பு. 7.
ஒழிவின்றி நின்ற பொருளை யுணரில்
அழிவின்றி நிற்கு முடம்பு. 9.
பற்றற்றுநின்ற பழம்பொருளைச் சிந்திக்
[கில்
முற்று மழியா துடம்பு. 10.

## திருவாய்மொழி.

களிப்பும் கவர்வுமற்றுப் பிறப்புப் பிணி
[மூப் பிறப்பற்று
ஒளிக்கொண்ட சோதிய மாயுடன் கூடுவ
[தென்று கொலோ
துளிக்கின்ற வானின்நிலம் சுடராழி சங்
[கேந்தி
அளிக்கின்ற மாயப்பிரா னடியார்கள்
[குழாங்களையே.

(நம்மாழ்வார் 2–ம் பத்து 3–ம் திருமொழி
செ. 10.)

உயிர் ஒதுங்கி இருந்து பிரிந்து போகாமல் பூரணமாய்க் குடி புகுந்து ஒழிவற ஒன்றிப் பிரியாத அமலதநுவாகிய "புக்கில்" அமையும்;

## திருக்குறள்.

புக்கிலமைந்தின்று கொல்லோவுடம்பினுட்
டுச்சி லிருந்த வுயிர்க்கு.

(ஷை அறத்துப் பால், நிலையாமை செ.10)

ஊன் ஞான சத்தி வடிவாகவும் உயிர் சிவமாகவும் வேறுபடும்—மாற்றமடையும்;

## சுந்தரர் தேவாரம்.

தானெனை முன்படைத் தானதறிந்து தன்
[பொன்னடிக்கே
நானென்ன பாடலந்தோ நாயினனைப் பொ
[ருட்படுத்து
வானெனை வந்தெதிர் கொள்ளமத்த யானை
யருள் புரிந்து
ஊனுயிர் வேறு செய்தா னொடித்தான்
[மலையுத்தமனே

(மேற்படி திருநொடித்தான் மலை செ. 1.)

தான் அவன் ஆகும் உண்மைச் சாமதி கைகூடும். ஊனம் அற்றதும் நிழற்சாயை இல்லாததும் பார்வை ஒன்றுக்கே புலப்படுவதுமாகிய "ஈனம் இல் காயம்" எனப்படும் ஓ வடிவம் (பிரணவ மந்திர சரீரம்) உளதாகும்.

## திருமந்திரம்.

தானவ னாகுஞ் சமாதிகை கூடினா
லான மலமறு மப்பசுத் தன்மைபோ
மீனமில் காய மிருக்கு மிருநிலத்
தூனங்க ளெட்டு மொழித் தொன்ற
[வோர்கட்கே.

(ஷை 8–ம் தந்–நின்மலர்வத்தை செ. 17.)

ஆமா றிற்சிவ னாருள் பெற்றுளோர்
போமலந் தன்னாற் புகழ்விந்து நாதம்விட்
டோமய மாகி யொடுங்கலி னின்மலந்
தோமறு சுத்தா வவத்தைத் தொழிலே.

(மேற்படி 8–ம் தந். கேவல சகல சுத்தம்
[செ. 7.)

## சுத்த சாதகம்.

சகச நிட்டை யதுல பித்திடுங் காலை
தம்முயற் சியதொன்று மின்றிச்
சகச மதாகித் தன்னுள மதனிற்
றுனின்றிங் கிடை விடாதூறும்
சுகவருள முதமதனை யேயருந்தித்
தொல் வடிவது மெள்ளக் கரைந்து
சுகவருள் வடிவாய்ச் சுட்டெலாமருளாய்த்
தோன்றி நின்றிடு நின்றபடியே. 63

சீவன் முத்திநிலை பூரணமாகும். எம்பெருமான் பூரணமாய்க் குடி புகுவன்; பூரணமான சகச நிட்டை கைகூடும். (திருவாசகம் திருப்படையாட்சி; ஷை அச்சோப்பதிகம்; சுத்த சாதகம் செ. 69.—80;90—93; சித்தாந்த சிகாமணி ஆசாரசம்பந்தித் தலம் செ. 5; ஷை இந்திரிய நிக்கிரகத் தலம் செ. 4.)

### சுதசங்கிதை.

நீடுமொனந்த ரூபநிருமல வொளியி
[லொன்ருக்
கூடுமா ெருருவா வெண்ணங் கோடலுஞ்
[சமாதியின்னும்
பாடுகொளேம் பூதத்திஞகு பலண்டமுற்று
மாடுகொள் விவேக மென்னு மடுசிகைத்
[தழலேக் கொண்டு;
பூதமாத்திரமே யென்னும் புத்தி செய்து
[றத் தகித்துத்
தோகமின்றி மீட்டுந் தூல பூதங் கடம்மை
யாதர வொடு சத்தாதி யாமெனத்தகித்
[துப்பின்னர்த்
தீதில் சத்தாதியாய செறிபூத சூக்கு
[மத்தை;
மாய மத்திர சொருப மென்று மாண்
[புறத்தகித்துப்
பாயவம் மாயைதன்னேப் பாங்கருட் சார்
[பினின்று
தேய்தரத் தகித்தானந் தச்சே யொளிப்
[பிழம்பின் மூழ்கு
நேயமார் துணிவு மஃதாமென நிகழ்த்திடு
[வரின்னும்
(சமாதி விதியுரைத் தவத்தியாயம்
[செ. 6, 7, 8.

இலகுநம் மொளிப்பிழம் போடிரண்டறக்
[கலக்கு முத்தித்
திலக மாமிதனேச் சாயுச்சிய மெனச்
[சொலும் வேதாந்தம்
பலவுரைத்திடுவ தென்னிப் பண்பார் முத்
[திக்கு மேலோர்
வலனுறு முத்தியில்லே மாதவ மனத்துக்
[கோடி.
(மேற்படி முத்திநிலேயுரைத்த அத்தியாயம்
[செ. 30.

இவ்வாறு ஊன் உடம்பைமாற்றி நித்தியத்துவம் அடைதலே சத்திய நெறியாகிய குருநெறியின் பயன் என நன்கு வற்புறுத்தும் பிரமாணங்கள் வேத நூல்களிலும் பிற நூல்களிலும் மிகப் பலவாய் உள்ளன. அவ்வவற்றில் கண்டு தெளிக.

மேலே கூறியவாறு "மலமாக் குரம்பை இது மாய்க்கமாட்டேன்" என்பது முதலாக வரும் பிரமாணங்களால் மெய்யடியார் சாதக யோதகங்களேவழுவறஅநுட்டித்து இவ்அசுத்த

## உடம்பின் அருமை பெருமை

(4—ம் வாரத்தொடர்ச்சி.)

அநித்தியமாய் அழிதன்மாலேத்தாய அசுத்த நிறையை அழிப்பது எவ்வாறு? எத்தனேயோ கோடி பிறவிகளில் ஈட்டிய நல்வினேப் பயனுகிய பக்குவம் பெற்ற ஆன்மாக்களுக்கு, அவர்களே ஆட்கொள்வான் முன்னிலேத் தோன்றிய கபிலே முதற்குரவனுகிய எம்பெருமான் அவ் ஆன்மாக்களின் சடபேதம் கர்மபேதம் அவற்ருலாம் பக்குவ பேதம் என்பன நோக்கி இவ் ஊழ்களின் பயனுகப் பெற்ற அவ் வான்மாக்களின் பஞ்ச பௌதிகக் கூட்டாகிய தூலத்தின் இயல்பு இன்னது எனக்கண்டு எவ்

---

தநுவை எம்பெருமான் குடிபுகுதற்கு ஏற்ற அமல தநுவாக மாற்றுதலாகிய செயற்கரும் செயலுக்குத் திருவருட் சகாயத்தை வேண்டி நின்றமையும், அக்காலங்களில் அவர் அடைந்த அளவிலாத் துன்பங்களும் பின்பு அவர் அமல தநுவைப் பெற்று நித்தியத்துவம் அடைந்தமையும் நன்கு புலப்படுதல் கண்டுகொள்க. வாய்மையான குருநெறியின் பயன் இதுவே என அறிக. இத்தன்மை வாய்க்கப்பெற்ற சீவன்முத்தர் மாண்பும் முத்திநிலேயும் அமயம் நேரும்போது விளக்கிக்கூறப்படும்.

இதுகாறும் கூறியவைகளால் வாய்மையான குருநெறி இன்னது என்பதும், அந் நெறிகாட்டும் குரவஞவான் சைவ பரிபாலகனுகிய எம்பெருமானே என்பதும் காயமாயம் கழிந்து நித்தியத்துவம் அடைதலே அந்நெறியின் பயன் என்பதும் ஒருவாறு உணரத்தகும்.

இங்கே கூறப்பட்ட உண்மைகள் அமயம் நேரும்தோறும் ஒவ்வோர் அம்சமாக விளக்கிக் கூறப்படும்.

எப்பூத தன் மாத்திரை எவ் எவ் ஏற்ற இறக்க நிறையாகப் பேதித்துப் பொலிந்திருக்கின்றனவோ அவ் அவ் ஏற்ற இறக்க நிறையின் பேதங்களே அறிந்து அழியும் நிறையாகிய அசுத்த நிறையைப் பெற்ற அத்தூலங்களுக்கு முன்னிலேமாயைப் பொருள்களே அவ்வவற்றின் இயல்பறிந்து இனமறிந்து நிறை யறிந்து அவ் ஆசான் ஊட்ட ஊட்ட, அஃதாவது அவ் ஆசான் விதிப்படி அப் பக்குவான்மாக்கள் முன்னிலேகளே நிறைகண்டு பஞ்சீகரணித்து ஒழுகி வர வர, அத்தூலத்தில் விளங்கும் அவ் அசுத்த நிறையாகிய அழுக்கு அகலும் என அறிக. இஃது என்போலவெனின், வண்ணுன் அழுக் கேறிய உடைகளே யெல்லாம் அமலமாக்கற் பொருட்டு முன்னிலே அழுக்குகளாகிய உவர்மண் கோமயம் சுண்ணம் என்பவைகளே நிறையறிந்து கூட்டிப் பஞ்சீகரணித்து அவற்றில் அவ் உடைகளேச் சிறிது சிறிதாகத் தாக்கி மெத்தப் பக்குவமாய் அக்கிநியில் வெதுப்பி உலர்த்தித் தூயனவாக்குதல் போல என்க. அழுக்கை அழுக்கால் மாய்ப்பது—தகிப்பது–கழிப்பது என்பது பொய்யல்லவே, இனத்தை இனம் கொல்லும், இனத்தை இனம் காக்கும் என இருவகையாகக் கூறப்படினும், இவை பொருளால் ஒன்றேயாம் ,பின்வரும் திருமூலர் திருவாக்கும் இவ்வுண்மையை நன்கு புலப்படுத்தும்,

### திருமந்திரம்

"ஆகு மூபாயமே யன்றி யழுக்கற்று
மோக மறச்சுத்த ஞதற்கு மூலமே
ஆகு மறுவை யழுக்கேற்றி யேற்றல்போல்
ஆகுவ தெல்லா மருட்பாச மாகுமே."

(ஷை 8-ம் தந்திரம் பதிபசு பாசவேறின்மை
[செ. 18.)

இவற்ருல், அசுத்த நிறை யமைந்த மருளுடம்புடைய சீவராகிய நாம் குருவருளால் முன்னிலேகளே நிறைகண்டு பஞ்சீகரணித்து உய்தியடையாத விடத்து நமக்கு முத்தி என்பது

முயற்கொம்பேயாதல் நன்கு புலப்படும். மும்மல காரியமாகிய இவ் அழுக்கு — அசுத்த நிறையமைந்த செடியா ராக்கை நீங்கப் பெறுதலே முப்புரதகனம் என்பதன் உண்மையாகும். பின்வரும் திருவாக்குக்களும் இவ்வுண்மையை நன்கு புலப்படுத்தும்

### திருமந்திரம்

அப்பணி செஞ்சடை யாதிபுராதனன்
முப்புரஞ் செற்றன னென்பர்கண் மூடர் [கண்
முப்புர மாவது மும்மல காரியம்
அப்புர மெய்தமை யாரறிவாரே

மேற்படி 2-ம் தந்-பதிவலியில் வீரட்டமெட்டு செ. 5.

### திருவாசகம்.

“.........அவயவஞ் சுவைதரு
கோற்றேன் கொண்டு செய்தனன்
ஏற்றார் மூதூ ரெழில்நகை யெரியின்
வீழ்வித் தாங்கன்
றருட்பெருந் தீயின்அடியோம் அடிக்குடில்
ஒருத்தரும் வழாமை யொடுக்கினன்
தடக்கையினெல்லிக்கனியெனக்காயினன்”

(மேற்படி திருவண்டப் பகுதி.)

“ இருள்தி ணிந்தெழுந் திட்டதோர் [வல்வினைச்
சிறுகுடி லிதுவித்தைப்
பொருளெ னக்களித் தருநர கத்திடை
விழப்புகு கின்றேனைத்
தெருளு மும்மதில் நொடிவரை யிடிதரச்
சினப்பதத் தொடு செந்தீ
அருளு மெய்ந்நெறி பொய்ந்நெறி
நீக்கிய அதிசயங் கண்டாமே ”

(ஷை அதிசயப்பத்து. செ. 10.)

அழுக்காகிய பாசம் நீங்கப் பெறுதலால் பிண நாற்றமுடைய இப் புலாற்றுருத்தியானது பூமணம் கமழும் பூந்துருத்தியாக மாற்றமடையும்.

“ பூவில் நாற்றம் போன்றுயர்ந் தெங்கும்
.......................................
ஒளிதரும் ஆக்கை செய்தோன் போற்றி

(மேற்படி திருவண்டப் பகுதி)

மலக்குரம்பை யாகிய மாயக்குரம்பையானது அமலக் குரம்பையாக மாற்றமடையும். நித்தியத்துவம் கைகூடும்.

“மாயக்குரம்பை நீங்க வழிவைத்
தார்க் கவ்வழியே போதுமாமே.”

என்பது நமது குருமூர்த்தி யாகிய அப்பர் அருள் வாக்கு. இத்தன்மை வாய்ந்தவனே அயன் கையெழுத்தை கிழித்தவன். விதியை வென்றவன். இருவினை சமரசப் பட்டமையால் இருவினை சொரூபமாகிய பிராரத்த தநு – உடல் உயிர் மாற்ற மடையப் பெற்றவன்; ஒழியப் பெற்றவன்.

“ ஊச லாட்டுமிவ் உடல் உயிராயின
இருவினையறுத்து......
உணர்வு தந்து ஒளியாக்கி ”

என்றார் மணிவாசக வள்ளல். இவனே ஞான நேத்திரம் பெற்றவன்; தன்னுயிர் பூரணமாக நிலைக்கப் பெற்றவன்; இவனை மன்னுயிர் எல்லாம் தொழும்.

“ தன்னுயிர் தானறப் பெற்றானை யேனைய
மன்னுயி ரெல்லாந் தொழும் ”

என்பது தேவர் வாக்கு. அகில சீவர்களுக்கும் மேலான சித்தன் என வதியும் இவன் பெருமை சீவராகிய நம்மனோர் சிந்தனை சொற்செயல்களுக்கு எட்டாது. விரிப்பிற் பெருகும். பூமணங் கமழும் பொற் பூபதிகள் என விளங்கும். இத்தகைய மெய்யடியார் மாட்டுச்சிவம் என்னும் செம்பொருள் விடையேறிக்காட்சிகொடுத்துவிளங்கி நிற்கும். இவர் சரீரமே பொன்னுகை மாறிய உடலம் – மெய். இத்தகைய உடலின் அருமை பெருமை யாரால் இயம்பமுடியும்? மயக்கத்தைத்தரும் மால் விடையாக மாறிச் சிவனைத் தாங்கினான் என்பதன் மறைபொருள் உட்பொருள் - உண்மை இதுவே என அறிக.

(தொடரும்)

## செவ்வாய்—பூவுலக உறவு

### சம்பாஷணை நடைபெறுகிறது

உறவு கண்டவருக்குப் பரிசு.

டாக்டர் மான்ஸ் பீல்ட ராபின்ஸன் என்பவர் செவ்வாய், வியாழன், சனி முதலிய கிரகங்களில் வசிப்பவர்களுடன் பேசி வருவதாகக் கூறுகிறார். இவர் ஒரு ஆங்கிலேயர்; வெகுகாலம் சர்க்காரில் உத்தியோகம் வகித்திருந்தார். இப்பொழுது லண்டனில் வியாபாரம் நடத்தி வருகின்றார். பிரான்ஸ் ராயல் சொஸைடியார் முனபு வெகு சீக்கிரத்தில், தம் கூற்றின் உண்மையை அவர் நிரூபிப்பார். இதை சொஸைடியார் ஒப்புக்கொண்டுவிட்டால் அவருக்கு 12,000 பவுன் பரிசு கிடைக்கும். இப்பரிசு நிதி 44 வருடங்களுக்கு முன்பாகவே ஒதுக்கி வைக்கப்பட்டதாகும். பிரெஞ்சு வான சாஸ்திரியான காமில் பிளம் மேரியன் என்ற இறந்துபோன வான சாஸ்திரியுடன் ஒரு மத்தியஸ்தரை வைத்துக்கொண்டு தாம் சம்பாஷணை நிகழ்த்தியதாக டாக்டர் ராபின்ஸன் கூறுகிறார். செவ்வாய் கிரகத்துடன் பேசுவதற்காக கண்டு பிடித்த ஒரு கருவியை அவர் சில வருடங்களுக்கு முன்னால் அவர் வெளிக் கொணர்ந்தார்.


## “வித்தகம்”

### சந்தா விபரம்.

வருட சந்தா
முன் பணம்

| | |
|---|---|
| இந்தியா, பர்மா, சிலோன் | ரூ.3-0-0 |
| மலாயா, சிங்கபூர், சைகோன் | ரூ.4-0-0 |

வித்தக நிலையம்,
புதுச்சேரி.
(Fr. India.)


Sandhanam Printing Works, Pondicherry. Le Gérant R. Nagarattinam.